# தன்னை ஈந்து மண்ணை மீட்ட

தன்னை ஈந்து மண்ணை மீட்ட தலைவன் யேசுவே
எம்மைத் தந்தோம் ஏற்று எமக்கு வாழ்வு நல்குவாய்
இறைவா ஏற்பாய் பலியில் இணைப்பாய் ( 2 )

**1.**
எல்லோரும் வாழ வேண்டும் - என்று
எல்லாமே படைத்தாயே
சிலரும் வாழ பலரும் வாடும்
நிலைமை வந்ததென்ன - ( 2 )
உன்னுள்ளம் நிறைவேற எல்லோரும் வாழ்ந்திட
எல்லாமே தருகின்றோம்
இறைவா ஏற்பாய் பலியில் இணைப்பாய்
இறைவா ஏற்பாய் பகிர்வாய் மாற்றுவாய்

**2**
ரசத்தோடு சேரும் நீர் போல் நாம்
உன்னிலே கலந்தோமே
சுயநலத்தின் சுவருக்குள்ளே
வாழும் நிலை என்ன - ( 2 )
ரசத்தோடு சேரும் நீர் போல் நாம் எம்மிலே கலந்தோமே
உன்னிலே கலந்து இறந்து உயிர்க்க எம்மையே தந்திடுவோம்
இறைவா ஏற்பாய் பலியில் இணைப்பாய்
இறைவா ஏற்பாய் உறவில் சேர்ப்பாய்